மத்திய அரசு அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து மத்திய அரசே நடத்துவதாக மாநில அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மத்திய அரசு இந்தக் கல்லூரியை எடுத்து நடத்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு இசைவு அளித்துள்ளது என்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு உதவ முடியவில்லை என்பதை மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு கல்வி அமைசசர்.

17—

அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் அமைத்தல்.

*21323—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம் அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) —இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேட்பாளராக இருந்த நாள்முதல் என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் மீது திருவண்ணாமலை அருணாசல ஈஸ்வரர் ஆலயத்தில் என் தாய்மீது என்றென்றும், மாதந்தோறும் அர்ச்சனை செய்த அந்த திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குத் தங்கத் தேர் வழங்கிய என்னுடைய இதய தெய்வம் அவர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்தில், போளூரிலே உள்ள என்னுடைய சொந்தக் கிராமமான, நான் பிறந்த மண்ணின் அத்திமூர் கிராமத்தில் கிளை நூலகம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து, எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே அறிவொளி இயக்கத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கல்வி அறிவு பெற வேண்டும் ; . பிற்படுத்தப்பட்ட மக்களெல்லாம் கல்வியறிவு பெற

1994 மார்ச் 17]

வேண்டும் என்று புரட்சித் தாய் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து எங்கள் அத்திமூர் கிராமத்திற்குக் கிளை நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்திமூர் கிராமத்திற்கு நூலகம் வேண்டுமென்ற கோரிக்கை இதுவரை முறையாகப் பெறப்படவில்லை. அத்திமூர் கிராமத்திற்கு மிக அருகில்தான் 4 கிலோ மீட்டர் தொலைவில் போளூர் கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது. தான் பிறந்த மண்ணில் நிச்சயமாக ஒரு பகுதி நேர நூலகம் வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்குமானால் மாவட்ட நூலக, பெயரில் 5 முதல் 10 சென்ட் காலி நிலமும். நூலகத்திற்கு ஏற்றதாக வாடகை இல்லாமல் உறுதியான ஒரு கட்டிடமும். ரூபாய் 2,000 அல்லது அதற்கு ஈடான நூலகத் தளவாடங்களும் வழங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்வருவார்களானால் அத்தோடு குறைந்த அளவு 100 உறுப்பினர்களைச் சேர்த்துத் தருவதாக வாக்களிப்பாரானால் இந்தக் கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இதுபோன்ற குறிப்புகள், நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த பொழுதே எங்களுடைய கிராமத்திற்கு நூல் நிலையம்—கிளை நூல் நிலையம் தேவை என்று அனைத்து வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே ஒரு கேள்விக்கு சொல்லியிருக்கிறேன். கேள்வி நேரத்திலே அத்தகைய குற்றச்சாட்டு கூடாது அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. நா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் அதனை மீண்டும் பரிசீலனை செய்து வரும் நிதியாண்டில் கிளை நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருக்குமானால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த ஆண்டிலேயே அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.